# இணையதளம் மூலம் விண்ணப்பங்கள்

# மாசு கட்டுப்பாட்டு குழுமம் அறிவிப்பு

**புதுச்சேரி, ஜூலை 26–**

தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் அனுமதி வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என மாசு கட்டுப்பாட்டு குழுமம் அறிவித்துள்ளது.

புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழும அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம் மின்னணு மற்றும் எளிதான வணிகத்தின் ஒரு பகுதியாக ஆன்லைன் ஒப்புதல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பை செயல்படுத்துகிறது.

டில்லி தேசிய தகவல் மையத்தினால் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் (சோதனை அடிப்படையில்) இணையதளம் தொடங்கப்படும்.

சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சைநிற வகைகளின் கீழ் வரும் தொழிற்சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் பிற நிறுவனங்களும் அனுமதி வேண்டி இணையதளம் (*http;//ponocmms.nic.in/.*) மூலம் ஆன்லைனில் விண்ணப்பங்களை சமர்பிக்கலாம்.

விவரங்களை சமர்ப்பித்து விண்ணப்பங்களின நிலையையும் கண்காணிக்க முடியும்.

புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமத்தின் மிக முக்கியமான மற்றும் அடிப்படை செயல்பாடுகளில் ஒன்றான ஒப்புதல் மற்றும் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு தொடர்பாக, இந்த மென்பொருள் 100 சதவீதம் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்கிறது.

மேலும் விவரங்களுக்கு இந்த அலுவலகத்தில் அல்லது http;// dste.puducherry.gov.in. இந்த வலைதளத்தில் பெறலாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.